



**TNPSC GROUP - II & IIA Prelims - Answer Explanation**

**பொதுத் தமிழ்**

**அலகு VII : இலக்கியம், தமிழ் அறிஞர்களும், தமிழ்த்தொண்டும்**

**55-39/30-19/50-20/25-10/44-14**

1. **விடை: B**

2. **விடை: D**

3. **விடை: C**

**விளக்கம்:**

உழவுக்குச் சிறப்புப் பெற்ற மருதநிலம் வயலும் வயல் சார்ந்த இடமாக வகைப்படுத்தப்பட்டு இருந்தது. மருத நிலத்தின் பெருமை கருதியே வேந்தனை முதன்மைப்படுத்தினர் தமிழர்.

4. **விடை: B**

5. **விடை: B**

**விளக்கம்:**

- தமிழ்வேலி - பரிபாடல்
- தேவாரம், திருவிளையாடல், பெரியபுராணம் மற்றும் இறையனார் அகப்பொருள் போன்ற பல்வேறு இலக்கியங்கள் 'சங்கம்' என்ற சொல்லால் இதனைக் குறிப்பிடுகின்றன

6. **விடை: D**

**விளக்கம்:**

வீரமாமுனிவர் எ, ஒ - குறில் எழுத்துகள் எனவும் ஏ, ஓ - நெடில் எழுத்துகள், கெ., பெ - குறில் எழுத்துகள், கே, பே நெடில் எழுத்துகள் எனவும் மாற்றினார்.

7. **விடை: D**

**விளக்கம்:**

செம்மொழித் தகுதிப்பாடுகள்

1. தொன்மையும்
2. பிறமொழித் தாக்கமின்மையும்
3. தாய்மையும்
4. தனித்தன்மையும்
5. இலக்கிய வளமும், இலக்கணச் சிறப்பும்
6. பொதுமைப் பண்பும்
7. நடுவுநிலைமையும்
8. பண்பாடு, கலைபட்டறிவு வெளிப்பாடும்
9. உயர்சிந்தனையும்
10. கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடும்
11. மொழிக் கோட்பாடும்

எனப் பதினொரு தகுதிக் கோட்பாடுகளை அறிவியல் தமிழறிஞர் முஸ்தபாவும், மொழிவல்லுநர்களும் வரையறுத்துள்ளனர்.

8. **விடை: C**

**விளக்கம்:**

- "சமைப்பது பெண்க ளுக்குத்
  தவிர்க்கொணாக் கடமை" - குடும்ப விளக்கு
- "மனிதரெல்லாம் அன்புநெறி காண்பதற்கும்
  வானைப்போல்" - புத்தகச்சாலை
- "விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
  மானுட சமுத்திரம் நானென்று கூவு" - பாரதிதாசன் கவிதைகள்

9. **விடை: D**

**விளக்கம்:**

- டி.கே.சி என அழைக்கப்படும் டி.கே. சிதம்பரநாதர் வழக்கறிஞர் தொழில் செய்தவர்.
- தமிழ் எழுத்தாளராகவும் திறனாய்வாளராகவும் புகழ் பெற்றவர்.
- இரசிகமணி என்று சிறப்பிக்கப்பட்டவர்.
- இவர் தமது வீட்டில் 'வட்டத்தொட்டி என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்கள் நடத்தி வந்தார்.

10. **விடை: D**

11. **விடை: A**

12. **விடை: C**

13. **விடை: A**

**விளக்கம்:**

- அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கௌரவ டாக்டர் பட்டம் (D.Litt) 1989ல் வழங்கிச் சிறப்பித்தது.
- இந்திய அரசின் அறிவியல் செய்தி பரப்பும் தேசியக் குழு, 1991ல் தேசிய விருது வழங்கிச் சிறப்பித்தது.

14. **விடை: D**

15. **விடை: A**

16. **விடை: D**

**விளக்கம்:**

- கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா
- இவர் எழுதிய முதல் காவியம் மாங்கனி
- இவர் எழுதிய இறுதிக் காவியம் இயேசு காவியம்

17. **விடை: C**

**விளக்கம்:**

- தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் 1978 ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது பெற்றார்
- தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் 1977 ஆம் ஆண்டு மத்திய அரசின் பத்மபூசன் விருது பெற்றார்

18. **விடை: C**

19. **விடை: A**

**விளக்கம்:**

- கவிஞர் தாரா பாரதி 26-2-1947 இல் திருவண்ணாமலை மாவட்டம் 'குவளை' என்னும் சிற்றூரில் பிறந்தார்.
- 34 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

20. **விடை: C**

**விளக்கம்:**

**சங்க இலக்கியங்களின் சிறப்புகள்**

- சங்க இலக்கியங்களின் மொத்த அடிகள் 26,350 ஆகும்.
- இவ்வளவு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள் உலகின் வேறு எந்த மொழியிலும் இல்லை.
- இதனை உலக இலக்கியங்களை ஆய்ந்த செக் நாட்டு மொழியியல் பேரறிஞர் கமில்சுவலபில் உறுதிப்படுத்தியுள்ளார்.
- மாக்சுமுல்லர் தமிழை மிகவும் பண்பட்ட மொழியாகப் பாராட்டியுள்ளார்.

**21. விடை: C**

**விளக்கம்:**

- சிறுகதை இலக்கிய முன்னோடி - புதுமைப்பித்தன்
- பேச்சுக்கலை மற்றும் அரசியல் சொற்பொழிவு மேம்பாடு - அறிஞர் அண்ணா
- பொதுவுடைமை - திரு.வி.க

**22. விடை: C**

**விளக்கம்:**

திராவிடமொழிகளின் பொதுப்பண்புகள் சொற்களின் இன்றியமையாப் பகுதி வேர்ச்சொல், அடிச்சொல் எனப்படும். திராவிட மொழிகளின் சொற்களை ஆராய்ந்தால், அவை பொதுவான அடிச்சொற்களைக் கொண்டிருப்பதைக் காணமுடிகிறது. திராவிட மொழிகளில் பொருள்களின் தன்மையை ஒட்டிப் பால்பாகுபாடு அமைந்துள்ளது. ஆனால், வடமொழியில் இவ்வாறு அமையவில்லை.

**23. விடை: B**

**24. விடை: D**

**விளக்கம்:**

- முடியரசன் இயற்பெயர் - துரைராசு
- முடியரசன் பெற்றோர் - சுப்பராயலு மற்றும் சீதா லட்சுமி
- முடியரசன் பிறந்த இடம் - பெரியகுளம், தேனி மாவட்டம்

VETRII I.A.S STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011

**25. விடை: C**

**விளக்கம்:**

**தாவர இலைப் பெயர்கள்**

- ஆல், அரசு, மா, பலா, வாழை - இலை
- அகத்தி, பசலை, முருங்கை - கீரை
- அருகு, கோரை - புல்
- நெல், வரகு - தாள்
- மல்லி - தழை
- சப்பாத்திக் கள்ளி, தாழை - மடல்
- கரும்பு. நாணல் - தோகை
- பனை, தென்னை - ஓலை
- கமுகு (பாக்கு) - கூந்தல்

**26. விடை: D**

**27. விடை: A**

**விளக்கம்:**

பாத்திரங்கள் கிறித்தவ வரலாற்றை அடிப்படையாகக் கொண்டவை

**28. விடை: A**

**விளக்கம்:**

- பள்ளிக்கூடத்திற்குக் காலையில் 5 மணிக்கே வர வேண்டியதால், பிள்ளைகள் பெரியவர்களை அழைத்து வருவது வழக்கம்.
- முதலில் வருபவனை "வேத்தான்" என்று அழைப்பார்கள்.
- "வேத்தான்" என்பது மற்றவர்களை விட தனிப்பெருமை உடையவன் என்ற பொருள்.

**29. விடை: C**

**விளக்கம்:**

- சிறுபாணாற்றுபடை 269 அடிகளைக் கொண்டுள்ளது.
- பெரும்பாணாற்றுப்படை 500 அடிகளைக் கொண்டுள்ளது.

**30. விடை: C**

**31. விடை: D**

**விளக்கம்:**

- திராவிட வித்யாபூஷணம் - பாரத தர்ம மகா மண்டலத்தார்
- குடந்தை நகர்க் கலைஞர் - பாரதியார்

**32. விடை: D**

**33. விடை: B**

**விளக்கம்:**

- வடமொழியில் எழுதப்பட்ட 'பில்கணீயம்' என்னும் காவியத்தைத் தழுவித் தமிழில் பாரதிதாசனால் 1937 ல் எழுதப்பட்டது புரட்சிக்கவி.
- தமிழக அரசு இவருடைய பெயரால் திருச்சியில் ஒரு பல்கலைக் கழகத்தை நிறுவியுள்ளது.

**34. விடை: A**

**விளக்கம்:**

- தெ.பொ.மீ. தமிழ் மொழி ஆய்வுடன் தொடர்பு உடையவர்.
- சிலப்பதிகாரத்துக்கு இவரைப் போன்று வேறு யாரும் திறனாய்வு எழுதியதில்லை
- மொழிப்புலமை இவரை அயல்நாட்டுப் பல்கலைக்கழகமான சிகாகோ பல்கலைக்கழகத்தில் 1961-இல் தமிழ்ப் பேராசிரியராகப் பொறுப்பேற்க வைத்தது.

**35. விடை: B**

**36. விடை: D**

**விளக்கம்:**

- குன்றக்குடி அடிகளார் நாயன்மார் அடிச்சுவட்டில், குறட்செல்வம், ஆலயங்கள் சமுதாய மையங்கள் உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.
- அருளோசை, அறிக அறிவியல் உள்ளிட்ட சில இதழ்களையும் நடத்தியுள்ளார்.

**37. விடை: D**

**விளக்கம்:**

**சி. இலக்குவனாரின் பட்டங்கள்**

- பயிற்சி மொழிக் காவலர்
- தமிழர் தளபதி
- தமிழ் காத்த தானைத் தலைவர்
- இலக்கணச் செம்மல்
- தமிழ் அரிமா
- தமிழ்ப் போராளி
- 20ஆம் நூற்றாண்டுத் தொல்காப்பியர்
- 20ஆம் நூற்றாண்டு இளங்கோ
- 20ஆம் நூற்றாண்டு செந்நாப் போதர்
- இரண்டாம் நக்கீரர்
- பெரும் பேராசிரியர்
- தன்மானத் தமிழ் மறவர்
- செந்தமிழ்ப் படையின் மானச் செம்மல்

VETRII I.A.S STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011

**38. விடை: D**

**விளக்கம்:**

| வகை | படைப்புகள் |
|---|---|
| சிற்றிலக்கியம் | திருக்காவலூர்க் கலம்பகம்,<br>கித்தேரி அம்மாள் அம்மானை,<br>அடைக்கல நாயகி மாலை,<br>அன்னை அழுங்கல் அந்தாதி,<br>கருணாம்பரப் பதிகம் |
| உரைநடை | வேதியர் ஒழுக்கம்,<br>வேத விளக்கம்,<br>பேதம் மறுத்தல்,<br>லூதர் இனத்தியல்பு,<br>ஞானக்கண்ணாடி,<br>வாமன் கதை |

**39. விடை: C**

**விளக்கம்:**

சி. இலக்குவனாரிடம் பயிற்சி பெற்ற மாணவர்கள்

- மு.கருணாநிதி
- இன்குலாப்
- நல்லகண்ணு
- மீரா
- காளிமுத்து

**40. விடை: C**

**விளக்கம்:**

- "முத்தமிழ் நாட்டுக்கு மானம் பெரிதன்றி
  மூச்சுப் பெரிதில்லை" - தமிழச்சியின் கத்தி
- பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம்.
- பாரதியாரின் கவிதைகள் மீது கொண்ட பற்றின் காரணமாகத் தம் பெயரைப் 'பாரதிதாசன்' என மாற்றிக் கொண்டார்.

**41. விடை: C**

**விளக்கம்:**

- தமிழ்ச் சொற்பிறப்பியல் ஒப்பியல் அகராதி - ஞானப்பிரகாச அடிகள்
- பழமொழி அகராதி - பெர்சிவல்

**42. விடை: C**

**43. விடை: B**

**விளக்கம்:**

பெற்றோரைக் குறிக்கும் அம்மை, அப்பன் என்னும் நாஞ்சில் நாட்டுத் தமிழ்ச் சொற்கள், வடமொழி உட்பட உலகப் பெருமொழிகள் பலவற்றிலும் வடிவு திரிந்து வழங்கி வருகின்றன. தமிழ்ச்சொல் இல்லாத உலகப் பெருமொழி யாதொன்றும் இல்லை என்பது மறுக்க முடியாத உண்மை.

**44. விடை: A**

**விளக்கம்:**

**மும்மை**

முதற்சங்கத்திலிருந்தே இசையும் நாடகமும் இயற்றமிழோடு இணைந்து முத்தமிழென வழங்கி வரலாயிற்று. முதலிரு சங்கத்திலும் வழங்கிய இலக்கண நூல்கள் முத்தமிழ் பற்றியனவாகவே இருந்தன.

**45. விடை: A**

**விளக்கம்:**

- 1925ஆம் ஆண்டு பவானந்தத்தின் தற்காலத் தமிழ்ச்சொல்லகராதியும், 1937ஆம் ஆண்டு மதுரைத் தமிழ்ப் பேரகராதியும் வெளிவந்தன.
- மு. சண்முகம் என்பவரால் தொகுக்கப்பட்ட தமிழ் - தமிழ் அகரமுதலி 1985ஆம் ஆண்டு தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனத்தால் வெளியிடப்பட்டது.

**46. விடை: B**

**விளக்கம்:**

- "தொல்காப்பியன்" என்ற புனைபெயர் கொண்டவர். தொல்காப்பியத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
- அது குறித்து ஆங்கிலத்தில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதியுள்ளார்.

**47. விடை: D**

**விளக்கம்:** சீகன்பால்கு - ஜெர்மனி

**48. விடை: B**

**விளக்கம்:** DRAVIDIAN FEDERATION - ஆங்கில இதழ்

**49. விடை: D**

**50. விடை: D**

**விளக்கம்:**

- இவரைப் போல இன்னொரு மகன் தனக்குக் கிடைப்பானா எனத் தமிழே ஏங்குமளவிற்கு ஆழ்ந்த அறிவும் புலமையும் பெற்றுத் தன் பணிகளால் தமிழுக்குப் பெருமையும் புகழையும் ஈட்டித்தந்தவர்.
- பன்மொழிப் புலவர், பல்கலைவித்தகர், சங்க இலக்கிய வரலாற்றைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் படைத்தவர்.

**51. விடை: D**

**52. விடை: D**

**விளக்கம்:**

- விடுதலைக் கவி - சுப்பிரமணிய பாரதியார்
- மக்கள் கவி - பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
- புரட்சிக்கவிஞர் - பாவேந்தர் பாரதிதாசன்

**53. விடை: B**

**54. விடை: D**

**55. விடை: D**

**56. விடை: B**

**விளக்கம்:**

- பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரத்தை உடுமலை நாராயணகவி "அவர் கோட்டை நான் பேட்டை" எனக் கூறியுள்ளார்.
- பாரதிதாசனால் "எனது வலதுகை" பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் என்று புகழப்பட்டவர்.

**57. விடை: A**

**விளக்கம்:**

- திராவிடம் எனும் சொல்லை முதலில் உருவாக்கியவர் - குமரிலபட்டர்
- திராவிடம் எனும் சொல்லை முதலில் பயன்படுத்தியவர் - கால்டுவெல்

**58. விடை: D**

**விளக்கம்:**

- கவியோகி சுத்தானந்த பாரதி - தமிழ் மாலைகளில் ஒரு வாடாத கற்பகமாலை காணப்படுகிறது. அதுவே தேம்பாவணி என்னும் பெருங்காப்பிய மாலை.
- கவியோகி சுத்தானந்த பாரதி - சாராமாம் தேம்பாவணியினைத் தொடினும், தமிழ் மனம் கமழும் என்கரமே.
- திருபூர்ணலிங்கம் பிள்ளை - இது சீவக சிந்தாமணிக்கு இணையான காவியமாகும்.
- கால்டுவெல் - தமிழ் இலக்கியத்தில் தலைசிறந்த நான்கு காவியங்களுள் தேம்பாவணியும் ஒன்று.

**59. விடை: B**

**விளக்கம்:**

**இந்தியாவின் 11 செம்மொழிகள்**

- தமிழ் (2004)
- சமஸ்கிருதம் (2005)
- கன்னடம் (2008)
- தெலுங்கு (2008)
- மலையாளம் (2013)
- ஒடியா (2014)
- மராத்தி (2024)
- பாலி (2024)
- பிராகிருதம் (2024)
- அசாமி (2024)
- வங்காளம் (2024)

**60. விடை: C**

**61. விடை: C**

**62. விடை: C**

**விளக்கம்:**

- "இலக்குவனார் தமிழார்வம் மிக்கவர்; தாய்மொழியாகிய தமிழின் வாயிலாகவே பல்கலைக்கழகக் கல்வி அமைதல் வேண்டும் என்பதில் தணியாத வேட்கை கொண்டவர்" என்கிறார் பேராசிரியர் டாக்டர் மு.வ.
- அதற்கேற்றவாறு, கல்வித்துறை, நீதித்துறை, ஆட்சித்துறை போன்ற அரசின் பல துறைகளில் தமிழ் உரிமையை நிலைநாட்ட வேண்டும் என்ற நோக்கத்தில், 'தமிழ் உரிமைப் பெருநடைத் திட்டம்' என்ற ஒன்றை உருவாக்கினார்

**63. விடை: C**

**விளக்கம்:** உருத்திரங் கண்ணனார் வைணவ சமயத்தில் பற்றுடையவர்.

**64. விடை: C**

**விளக்கம்:**

- கி. வா. ஜகந்நாதன் என்றழைக்கப்பட்ட கிருஷ்ணராயபுரம் வாசுதேவ ஜகந்நாதன்.
- கி. வா. ஜகந்நாதன் தமிழ் இதழாளர், கவிஞர், எழுத்தாளர் மற்றும் நாட்டுப்புறவியலாளர்.

**65. விடை: B**

**66. விடை: D**

**விளக்கம்:**

- தொன்னூல் விளக்கம் என்ற நூலில் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி ஆகிய ஐந்து இலக்கணங்களைத் தொகுத்தார்.
- வேதவிளக்கம், வேதியர் ஒழுக்கம், பரமார்த்தகுரு கதை, திருக்காவலூர்க்கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, தேம்பாவணி உள்ளிட்ட நூல்களை இயற்றியுள்ளார்

VETRII I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

**67. விடை: D**

**68. விடை: D**

**விளக்கம்:**

- குமரகுருபரரின் நீதிநெறி விளக்கம் நூலின் 51 பாடல்களுக்கு உரை எழுதியவர்
- உரையாசிரியராகவும் விளங்கினார்
- ரூபாவதி, கலாவதி போன்ற பெண்பால் வேடங்களில் நடித்தார்
- நாடகக்கலை வளர்ச்சிக்குப் பங்காற்றினார்
- சித்திரக்கவி எழுதும் திறன் பெற்றவர்

**69. விடை: D**

**விளக்கம்:**

- பாரதிதாசனின் பெற்றோர் கனகசபை - இலக்குமி அம்மையார்
- பாரதிதாசன் பாரதியாரைச் சந்தித்த ஆண்டு - 1908
- பாரதிதாசன் பாடிய முதல் கவிதை - "எங்கெங்கு காணினும் சக்தியடா"

**70. விடை: D**

**விளக்கம்:**

- தற்கால நக்கீரர் - பெருஞ்சித்திரனார்

**சி. இலக்குவனாரின் வேறு சில சிறப்புப் பெயர்கள்**

- பயிற்சி மொழிக் காவலர்
- தமிழ் காத்த தானைத் தலைவர்
- தமிழ் அரிமா
- தமிழ்ப் போராளி
- 20ஆம் நூற்றாண்டுத் தொல்காப்பியர்
- இரண்டாம் நக்கீரர்
- பெரும் பேராசிரியர்

**71. விடை: B**

**72. விடை: B**

**விளக்கம்:**

- டி. கே. சிதம்பரநாதரின் பணி: வழக்கறிஞர், சென்னை மாநில மேலவை உறுப்பினர், அறநிலையத்துறை ஆணையர், திறனாய்வாளர்.
- இவர் கடித இலக்கியத்தின் முன்னோடி, தமிழிசைக் காவலர், வளர்தமிழ் ஆர்வலர், குற்றால முனிவர் எனப் பலவாறாகப் புகழப்படுகிறார்.

**73. விடை: A**

**விளக்கம்:** மகாமகோபாத்தியாய, திராவிட வித்தியா பூஷணம், தாக்ஷிணாத்திய கலாநிதி போன்ற பட்டங்கள் பெற்றவர். கும்பகோணம் அரசு கலைக் கல்லூரி மற்றும் சென்னை மாநிலக் கல்லூரி ஆகியவற்றில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார்; 1932இல் சென்னைப் பல்கலைக்கழகம் ‘டாக்டர்’ பட்டம் வழங்கியது.

**74. விடை: A**

**75. விடை: A**

**விளக்கம்:** தமிழ்ச் செய்யுள் தொகை என்ற நூலைத் தொகுத்து உள்ளார்

**76. விடை: A**

**விளக்கம்:** “இப்படிப்பட்ட தலைவர் கிடைப்பது அரிது. அவர் நல்ல உத்தமமான மனிதர்” என்று காயிதே மில்லத் அவர்களைப் பாராட்டியவர் தந்தை பெரியார்.

**77. விடை: C**

**விளக்கம்:**

- மக்கள் பணியையே இறைப் பணியாக எண்ணித்தம் வாழ்நாள் முழுவதும் தொண்டு செய்தவர் தவத்திரு குன்றக்குடி அடிகளார்.
- குன்றக்குடி திருமடத்தின் தலைவராக விளங்கிய இவர் தமது பேச்சாலும் எழுத்தாலும் இறைத்தொண்டும் சமூகத் தொண்டும் இலக்கியத் தொண்டும் ஆற்றியவர்.
- திருக்குறள் நெறியைப் பரப்புவதைத் தம் வாழ்நாள் கடமையாகக் கொண்டவர்.

**78. விடை: B**

**விளக்கம்:**

- ‘குறள்நெறி’ என்ற இதழின் ஆசிரியராக இருந்தார்.
- கருமவீரர் காமராசர் என்ற வரலாற்று நூலையும் இயற்றினார்.

**79. விடை: C**

**விளக்கம்:**

தமிழ் மொழியின் உயர்விற்கு உழைப்பதே எனது உறுகடன் என்றும், தமிழ்ப்போரே எனது வாழ்க்கைப் போர் என்ற குறிக்கோளையும் வாழ்வின் உயிராக ஏற்றுக் கொண்டேன்.

**80. விடை: A**

**81. விடை: D**

**விளக்கம்:**

- பாரதியாரின் மீது கொண்ட பற்றினால் பாரதிதாசன் என்று தன் பெயரை மாற்றிக்கொண்டார்.
- இவரின் பெயரில் திருச்சிராப்பள்ளியில் பல்கலைக்கழகம் அமைத்து சிறப்புச் செய்யப்பட்டுள்ளது.

**82. விடை: D**

**விளக்கம்:**

| | |
|---|---|
| கயாதரம் | கயாதரர் |
| பல்பொருள் சூடாமணி நிகண்டு | ஈசுரபாரதியார் |
| வடமலை நிகண்டு | ஈசுரபாரதியார் |
| கைலாச நிகண்டு சூடாமணி | கைலாசர் |
| பாரதிதீபம் | திருவேங்கட பாரதி |
| ஆசிரிய நிகண்டு | ஆண்டிப் புலவர் |
| அரும்பொருள் விளக்க நிகண்டு | அருமருந்தைய தேசிகர் |

**83. விடை: C**

**விளக்கம்:**

உலகம் ஐம்பூதங்களாகிய நிலம், நீர், வெப்பம், காற்று, வானம் ஆகிய ஐந்தும் உள்ளடக்கியது எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது.

நிலம் நீர் தீ வளி விசும்போடு ஐந்தும்
கலந்த மயக்கம் ஆதலின்…' (தொல்காப்பியம், பொருள். 635)

இதுபோன்றதொரு குறிப்பைப் பின்வரும் புறநானூற்றுப் பாடல் உணர்த்தும்.

மண்திணிந்த நிலனும்
நிலன் ஏந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித்தலை இய தீயும்
தீ முரணிய நீரும் என்றாங்கு
ஐம்பெரும்பூதத்து இயற்கை போல்… (புறம், 2)

**84. விடை: B**

**விளக்கம்:** தேம்பாவணி 17 ஆம் நூற்றாண்டில் படைக்கப்பட்டது

**85. விடை: B**

**விளக்கம்:**

பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் வாழ்ந்த காலம் 13.04.1930 முதல் 08.10.1959.

**86. விடை: C**

**விளக்கம்:**

- கன்னிப்பாவை - இறையரசன்
- தைப்பாவை - கண்ணதாசன்
- கற்பாவை - உமா மகேஸ்வரி

**87. விடை: C**

**விளக்கம்:**

"பாடம் படியா ஒரு பையன்
பள்ளி செல்லா ஒரு பையன்
மூடன் ஆனான் முன்னாலே
மூட்டை சுமந்தான் பின்னாலே" - தமிழ் ஒளி

**பொருள்:**

பள்ளிக்குச் சென்று முறையாகப் பாடம் படிக்காத பெற்றோரின் சொல்லைக் கேளாத சிறுவன் தன் அறியாமையால் பிற்காலத்தில் கடினமான மூட்டை சுமக்கும் நிலைக்குத் தள்ளப்படுகிறான் என்பதை இப்பாடல் கூறுகிறது. கல்வியின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் ஒரு நீதிக்கதை பாடல் இது.

**88. விடை: D**

**விளக்கம்:**

- கண்ணதாசனின் புனைபெயர்கள்: காரை முத்துப்புலவர், வணங்காமுடி, பார்வதிநாதன், ஆரோக்கியசாமி, கமகப்பிரியா.
- கண்ணதாசனின் இயற்பெயர்: முத்தையா

**89. விடை: A**

**விளக்கம்:** மெய்புகட்டும் அறமேன்மை கிட்டும் இந்த மேதினி வாழ்வழி காட்டிருக்கும் - என்ற பாடல் 'கனிச்சாறு' என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. இந்நூல் எட்டுத் தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இது தமிழுணர்வு நிறைந்த பாடல்களைக் கொண்டது.

**90. விடை: B**

**விளக்கம்:**

- தனித்தமிழுக்கு வித்திட்டவர் - பரிதிமாற் கலைஞர்
- தமிழைத் தழைக்கச் செய்த செம்மல் - மறைமலையடிகள்

**91. விடை: C**

**விளக்கம்:**

பிற சிறப்புப் பெயர்கள்

- எள்ளல் இலக்கிய வழிகாட்டி
- உரைநடை இலக்கிய முன்னோடி

**92. விடை: B**

**விளக்கம்:**

- சென்னை அண்ணாசாலையில் தேவநேயப் பாவாணர் பெயரில் மாவட்ட மைய நூலகம் உள்ளது
- இராசபாளையம் அருகிலுள்ள முறம்பில் பாவாணர் கோட்டம் அமைக்கப்பட்டுள்ளது
  - அங்கு பாவாணரின் முழு உருவச்சிலை உள்ளது
  - அவரின் பெயரில் நூலகமும் அமைந்துள்ளது

**93. விடை: D**

**விளக்கம்:**

- தெ. பொ. மீனாட்சிசுந்தரம், சென்னை, சிந்தாதிரிப்பேட்டையில் 1901-ஆம் ஆண்டு சனவரி 8-ஆம் நாள் பொன்னுசாமி கிராமணியார் என்பவருக்கு மகனாகப் பிறந்தார்.
- அவருடைய தந்தைக்குத் தமிழ் மீதும் தமிழ் அறிஞர்கள் மீதும் இருந்த பற்றினால், மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் பெயரை மகனுக்கு இட்டார்.

**94. விடை: C**

**விளக்கம்:**

- சுள்ளி - காய்ந்த குச்சு (குச்சி)
- விறகு - காய்ந்த சிறுகிளை

VETRI I.A.S STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

**95. விடை: D**

**விளக்கம்:**

- திரு.வி.க. அவர்கள் தமிழ் மொழியில் மெல்லொலிகள் மிகுந்திருப்பதே அதன் தொன்மைக்குக் காரணம் என்றார்.
- இந்தியாவில் மட்டும் 179 இலக்கிய வளமொழிகளும் 544 கிளை மொழிகளும் உள்ளன என்று இந்தியநாட்டு மொழி நூலறிஞராய் விளங்கிய காலஞ்சென்ற சுனித் குமார் சட்டர்ஜி குறிப்பிட்டுள்ளார்.

**96. விடை: A**

**97. விடை: C**

**விளக்கம்:**

குன்றக்குடி அடிகள் - அரங்கநாதன்

**98. விடை: C**

**விளக்கம்:**

- ஊர் - தொல்காப்பியம்
- வேளாண்மை - கலித்தொகை, திருக்குறள்

**99. விடை: D**

**விளக்கம்:**

- மக்கள் கவிஞர் - பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்
- பகுத்தறிவுக் கவிராயர் - உடுமலை நாராயணக்கவி

**100. விடை: C**

**101. விடை: C**

**விளக்கம்:**

டி.கே.சி தமது வீட்டில் வட்டத்தொட்டி' என்னும் பெயரில் இலக்கியக் கூட்டங்களை நடத்தி வந்தார்.

**102. விடை: B**

**விளக்கம்:**

இந்தியா விடுதலை பெற்றபின் மாநிலங்களவை உறுப்பினர், மக்களவை உறுப்பினர் எனப் பல பொறுப்புகளில் இருந்து மக்களுக்காகத் தொண்டு செய்தார்.

**103. விடை: D**

**விளக்கம்:** நிலத்தில் இருந்து நீரை உறிஞ்சி இறைக்கும் ஆழ்துளைக் கிணறு, அக்காலத்தில் இருந்திருக்கலாம் என்பதனை, 'அந்தக் கேணியும் எந்திரக் கிணறும்' என்னும் பெருங்கதை அடியின் வாயிலாக அறியமுடிகிறது. மேலும், பெருங்கதையில் வரும் எந்திரயானை கிரேக்கத் தொன்மத்தில் குறிப்பிடப்படும் 'டிராய்' போருடன் இணைத்துப் பேசப்படும் எந்திரக்குதிரையுடன் ஒத்தது.

**104. விடை: C**

**விளக்கம்:**

- தேம்பா + அணி எனப் பிரித்து வாடாதமாலை என்றும்,
- தேன் + பா + அணி எனப் பிரித்து தேன்போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு என்றும் இந்நூலுக்குப் பொருள் கொள்ளப்படுகின்றது.
- 3615 பாடல்கள் உள்ளன.

**105. விடை: C**

**விளக்கம்:** தமிழ் மொழியை எழுத இருவகை எழுத்துகள் வழக்கிலிருந்தன என அறிகிறோம். அரச்சலூர் கல்வெட்டே இதற்குச் சான்றாகும். இக்கல்வெட்டில் தமிழ் எழுத்தும் வட்டெழுத்தும் கலந்து எழுதப்பட்டுள்ளன.

**106. விடை: D**

**107. விடை: D**

**108. விடை: C**

**109. விடை: A**

**விளக்கம்:**

மதுரையில் 05.01.1981 அன்று நடைபெற்ற உலகத்தமிழ் மாநாட்டின்போது, மாந்தன் தோற்றமும் தமிழர் மரபும் என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றித் தமிழன்னைக்குப் பெருமை சேர்த்தார்.

**110. விடை: C**

**111. விடை: B**

**விளக்கம்:**

**தமிழர் மற்றும் நிலத்தின் பயன்**

- தமிழர் நிலத்தை அதன் பயன் அடிப்படையில் மதித்தனர்.
- செம்மண் நிலம் பயனுள்ளதாக இருப்பதால் அதைப் போற்றினர்.
- இதனை 'செம்புலப் பெயல் நீர்போல' என்ற குறுந்தொகை வரி எடுத்துக்காட்டுகிறது.
- உவர்நிலம் அதிக நீர் இருந்தாலும் பயன் தராது.
- இதனை 'அகல்வயல் பொழிந்தும் உறுமிடத் துதவா உவர்நிலம்' என்ற புறநானூறு அடிகள் விளக்குகின்றன.
- எந்தப் பயன்பாடும் இல்லாத நிலம் களர்நிலம் எனப்படுகிறது.
- 'பயவாக் களரனையர் கல்லாதவர்' என்று திருவள்ளுவர் இதை எடுத்துக்கூறுகிறார்.

**112. விடை: A**

**விளக்கம்:**

**தனிநாயகம் அடிகள்**

- தமிழுக்குத் தொண்டாற்றிய கிறித்துவப் பெரியார்களில் தனிநாயகம் அடிகள் முக்கியமானவர்.
- அவரின் சொற்பொழிவுகள் தமிழர் புகழைப் பரப்பும் நோக்கத்துடன் அமைந்தவை.
- இலங்கையின் யாழ்ப் பல்கலைக்கழகத்தில் ஆற்றிய பஸ்கர் நினைவு அறக்கட்டளைச் சொற்பொழிவு பாடமாக இடம்பெற்றுள்ளது.
- தம் சொற்பொழிவுகள் மூலம் உலகம் முழுவதும் தமிழின் புகழைப் பரப்பினார்.
- அகில உலகத் தமிழாய்வு மன்றம் உருவாக இவருக்கு முக்கிய பங்கு உண்டு.
- உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உருவாகவும் அவர் காரணமாக இருந்தார்.
- அவர் தொடங்கிய 'தமிழ்ப் பண்பாடு' இதழ் இன்றுவரை தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கிறது.

**113. விடை: B**

**விளக்கம்:**

“எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால் இங்குள்ள எல்லோரும் நாணிடவும் வேண்டும்” என பாடியவர் - பாரதிதாசன்

**114. விடை: D**

**விளக்கம்:**

- செந்தமிழ்ச் செம்மல் ‘டாக்டர் ஜி.யு. போப்’, 1839ஆம் ஆண்டில், தென்னிந்தியாவுக்கு வந்தார்.
- சென்னையை அடைந்த போப், ‘சாந்தோம்’ என்னும் இடத்தில் முதன்முதலாகத் தமிழ் உரையைப் படித்துச் சொற்பொழிவாற்றினார்.

**115. விடை: D**

**விளக்கம்:**

**உலகத் தமிழ் மாநாடுகள் நடைபெற்ற இடங்கள்**

- 1வது: கோலாலம்பூர், மலேசியா (1966)
- 2வது: சென்னை, இந்தியா (1968)
- 3வது: பாரிஸ், பிரான்ஸ் (1970)
- 4வது: யாழ்ப்பாணம், இலங்கை (1974)
- 5வது: மதுரை, இந்தியா (1981)
- 6வது: கோலாலம்பூர், மலேசியா (1987)
- 7வது: போர்ட் லூயிஸ், மொரிஷியஸ் (1989)
- 8வது: தஞ்சாவூர், இந்தியா (1995)
- 9வது: கோலாலம்பூர், மலேசியா (2015)
- 10வது: சிகாகோ, அமெரிக்கா (2019)

**116. விடை: D**

**விளக்கம்:**

- குடும்ப விளக்கு, குடும்ப உறவுகள் அன்பு என்னும் நூலால் பிணைந்துள்ளதை உணர்த்துகிறது;
- கற்ற பெண்ணின் குடும்பமே பல்கலைக்கழகமாக மிளிரும் என்பதைக் காட்டுகிறது.
- இந்நூல் ஐந்து பகுதிகளாகப் பகுக்கப்பட்டுள்ளது.
- இரண்டாம் பகுதியில், விருந்தோம்பல் தலைப்பிலுள்ள தலைவியின் பேச்சில் இடம்பெற்றுள்ள கவிதைகள் பாடப்பகுதியாக உள்ளன.

**117. விடை: C**

**விளக்கம்:**

செந்தமிழ்ச் செம்மல் - ஜி. யு. போப்

**118. விடை: D**

**விளக்கம்:**

பாவாணரின் பிற நூல்கள் (மொத்தம் 43)

- முதல் தாய்மொழி
- தமிழ்நாட்டு விளையாட்டுகள்
- தமிழர் திருமணம்
- வடமொழி வரலாறு
- மண்ணிலே விண்
- பண்டைத் தமிழர் நாகரிகமும் பண்பாடும்
- உயர்தரக் கட்டுரை இலக்கணம்
- சொல்லாராய்ச்சிக் கட்டுரைகள்
- திருக்குறள் மரபுரை

**119. விடை: A**

**விளக்கம்:**

- காயிதே மில்லத் 1946 முதல் 1952 வரை அப்போதைய சென்னை மாகாணச் சட்டமன்ற உறுப்பினராக இருந்து சிறப்பாகப் பணியாற்றினார்.
- காயிதே மில்லத் என்னும் அரபுச் சொல்லுக்குச் சமுதாய வழிகாட்டி என்று பொருள்.

**120. விடை: B**

**121. விடை: B**

**விளக்கம்:**

- தமிழ் அகரமுதலி வரலாற்றில், செம்பாதி இடத்தைப்பெறும் சொற்பொருள் துறை நூல்கள் நிகண்டுகளாம்
- நிகண்டுகளில் பழைமையானது சேந்தன் திவாகரம். இதன் ஆசிரியர் திவாகரர்.
- இந்நிகண்டினைத் தொடர்ந்து இருபத்தைந்து நிகண்டுகள் தோன்றியுள்ளன.
- இவற்றில் சிறப்பானது மண்டலபுருடர் இயற்றிய சூடாமணி நிகண்டு.

**122. விடை: B**

**விளக்கம்:**

**பெரியார் எழுத்துச் சீர்திருத்தம்**

அச்சுக் கோப்பதற்காக தமிழ் எழுத்துகளுக்குத் தனி அச்சுகள் உருவாக்கப்பட வேண்டியிருந்தது. இக்குறை களை நீக்குவதற்காகத் தந்தை பெரியார் எழுத்துச் சீர்திருத்தம் செய்தார். அவரது எழுத்துச் சீர்திருத்தங்கள் சில ஏற்கப்பட்டுத் தமிழக அரசால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளன

**123. விடை: D**

VETRI IAS STUDY CIRCLE SUCCESS GUARANTEED Since 2011

**124. விடை: D**

**விளக்கம்:** 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு, சங்ககாலத்திலேயே தமிழில் மொழிபெயர்ப்பு மேற்கொள்ளப்பட்டதைப் புலப்படுத்துகிறது.

**125. விடை: D**

**விளக்கம்:**

- தமிழ் - தமிழ் அகராதி - லெவி - ஸ்பால்டிஸ்
- தமிழின் முதல் தமிழ் - ஆங்கிலம் அகராதியை (Tamil-English Dictionary) உருவாக்கியவர் ஜோகன் பிலிப் பெப்ரிசியஸ் (Johann Philipp Fabricius) ஆவார்
- மிரன் விண்ஸ்லோ (Miron Winslow) உருவாக்கிய தமிழ்-ஆங்கில அகராதி இன்றும் சிறந்த ஒன்றாகக் கருதப்படுகிறது.
- வீரமாமுனிவர் தொகுத்த சதுரகராதியே தமிழில் தோன்றிய முதல் அகரமுதலி.
- இது கி.பி. 1732ஆம் ஆண்டு வெளிவந்தது.
- சதுர் என்பதற்கு நான்கு என்பது பொருள். இந்நூலில் பெயர், பொருள், தொகை, தொடை என நான்குவகைகளில் தனித்தனியாகப் பொருள் விளக்கம் அளிக்கப்பட்டுள்ளது.

**126. விடை: C**

**விளக்கம்:** உலகத் தமிழ்க் கழகத்தின் நிறுவனர்

**127. விடை: B**

**128. விடை: B**

**விளக்கம்:**

- கான்ஸ்டாண்டின் - இத்தாலி சொல்
- மதுரை தமிழ் சங்கம் வீரமாமுனிவருக்கு தைரியநாதர் என்ற பட்டத்தை வழங்கியுள்ளது.

**129. விடை: C**

**விளக்கம்:**

| சொல் | முதலில் ஆளப்படும் இலக்கியம் | மேற்கோள் |
|---|---|---|
| தமிழ் | தொல்காப்பியம் | தமிழென் கிளவியும் அதனோ ரற்றே |
| தமிழ்நாடு | சிலப்பதிகாரம் வஞ்சிக்காண்டம் | இமிழ்கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய இதுநீ கருதினை ஆயின் |
| தமிழன் | அப்பர் தேவாரம் | ... தமிழன் கண்டாய் திருத்தாண்டகம் |

**130. விடை: C**

**131. விடை: C**

**விளக்கம்:**

ஜி.யு. போப் ஆங்கில மொழியில் எழுதப் பெற்றிருந்த தமிழ்நாட்டு வரலாற்றை, தமிழில் எழுதிப் பதிப்பித்தார்.

**132. விடை: D**

**விளக்கம்:**

- முதல் சங்கம் - காய்ச்சின வழுதி முதல் கடுங்கோன் வரை
- இடைச் சங்கம் - வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் வரை
- கடைச் சங்கம் - முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரை

**133. விடை: B**

**134. விடை: B**

**விளக்கம்:**

- தாரா பாரதியின் இயற்பெயர் இராதாகிருஷ்ணன்.
- தாரா பாரதியின் புனைபெயர் கவிஞாயிறு

**135. விடை: D**

**136. விடை: C**

**விளக்கம்:**

மனோன்மணீயம் (1891) என்னும் நூலில் பெ. சுந்தரம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்

**137. விடை: D**

**விளக்கம்**

பிற ஐரோப்பிய அறிஞர்கள்

- சிலேட்டர்
- சார்லஸ் கவர்
- கிரியர்சன்
- கால்டுவெல்
- மாக்சு முல்லர்
- கமில் சுவலபில்
- பியேர் லோத்தி

**138. விடை: B**

**விளக்கம்:**

- வீரமாமுனிவர் திருச்சியை ஆண்ட சந்தாசாகிப் அவர்களைச் சந்திக்க உரையாடுவதற்காக இரண்டே மாதங்களில் உருது மொழியை கற்றுக்கொண்டார்.
- "இஸ்மத் சன்னியாசி" என்பது ஒரு பாரசீகச் சொல்

**139. விடை: D**

**140. விடை: A**

**விளக்கம்:**

- தமிழ்ஒளி பாரதியாரின் வழித்தோன்றலாகவும் பாரதிதாசனின் மாணவராகவும் விளங்கியவர்.
- தமிழ்ஒளி வாழ்ந்த காலம் 1924 முதல் 1965.

**141. விடை: D**

**விளக்கம்:**

**கெட்டுப்போன காய்கனி வகை**

- சூம்பல் - நுனியில் சுருங்கிய காய்
- சிவியல் - சுருங்கிய பழம்
- சொத்தை - புழுபூச்சி அரித்த காய் அல்லது கனி
- வெம்பல் - சூட்டினால் பழுத்த பிஞ்சு
- அளியல் - குளுகுளுத்த பழம்
- அழுகல் - குளுகுளுத்து நாறிய பழம் அல்லது காய்
- சொண்டு - பதராய் போன மிளகாய்.

**142. விடை: C**

**விளக்கம்:**

- மொரிசியஸ், இலங்கை உள்ளிட்ட நாடுகளின் பணத்தாள்களில் தமிழ்மொழி இடம்பெற்றுள்ளது.
- உலகத்திலேயே ஒரு மொழிக்காக உலக மாநாடு நடத்திய முதல் நாடு மலேசியாவே, மாநாட்டுக்குரிய அம்முதல் மொழியும் தமிழே.

- பன்மொழிப் புலவர் அப்பாதுரையார்

**143. விடை: A**

**விளக்கம்:**

"வானூர்தி செலுத்தல் வைய
மாக்கடல் முழுது மளத்தல்
ஆனஎச் செயலும் ஆண்பெண்
அனைவர்க்கும் பொதுவே!" - பாரதிதாசன்

**பொருள்:**

வானூர்தியைச் செலுத்துதல், உலகையும் கடலையும் அளத்தல் போன்ற எந்தச் செயலும் ஆண், பெண் இருபாலருக்கும் பொதுவானவை. இன்று உலகமானது ஆண்களின் கட்டுப்பாட்டில் நலிந்து போனதால்தான் பெண்களுக்கு விடுதலை பறிபோனது.

**144. விடை: B**

**விளக்கம்:**

- 1839 - தமிழகம் வருகை
- 1842-1849 - சாயர்புரத்தில் பணியாற்றினார்
- 1850 - திருமணம் செய்துகொண்டார்
- அதன்பின் மனைவியுடன் தமிழகம் வந்து தஞ்சாவூரில் பணியாற்றினார்

**145. விடை: D**

**விளக்கம்:**

குற்றியலிகர எழுத்துகளின்மேல் புள்ளி இடும் வழக்கம் இக்காலத்தில் வழக்கொழிந்துவிட்டது.

**146. விடை: C**

**விளக்கம்:**

- பாரதிதாசனின் பெற்றோர் கனகசபை - இலக்குமி அம்மையார்
- பாரதிதாசன் பாரதியரைச் சந்தித்த ஆண்டு - 1908
- பாரதிதாசன் பாடிய முதல் கவிதை - "எங்கெங்கு காணினும் சக்தியடா"

**147. விடை: B**

**148. விடை: A**

**விளக்கம்:**

- கண்ணதாசனின் இயற்பெயர் முத்தையா.
- முடியரசன் இயற்பெயர் துரைராசு.
- புதுமைப்பித்தன் இயற்பெயர் சொ. விருத்தாசலம்.
- தமிழ் ஒளி இயற்பெயர் விஜயரங்கம்.

**149. விடை: A**

**விளக்கம்:**

- 2012-ம் ஆண்டு முதல் இந்த விருது உ.வே. சாமிநாத ஐயர் நினைவாக வழங்கப்படுகிறது
- பிப்ரவரி 19 - தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி நாள்

**150. விடை: A**

**விளக்கம்:**

- உ.வே. சா அவர்களின் பணிகளைப் பாராட்டிய வெளிநாட்டவர்கள் ஜி.யு போப், சூலியல் வின்சோன்.
- பாசுகரசேதுபதி தலைமையில் பாண்டித்துரை மேற்பார்வையில் பரிதிமாற்கலைஞர், உ. வே. சாமிநாதர், இராகவனார் ஆகிய பேராசிரியர்கள் துணையுடன் மதுரைத் தமிழ்ச்சங்கம் நிறுவப்பட்டது.

**151. விடை: B**

**விளக்கம்:**

- பெருஞ்சித்திரனார் 1981-ல் உலகத்தமிழ் தமிழின முன்னேற்றக் கழகம் என்ற அமைப்பை நிறுவினார்.
- 1982-ல் 'தமிழ் நிலம்' என்ற ஏட்டைத் தொடங்கினார்.

**152. விடை: C**

**153. விடை: D**

**விளக்கம்:**

- உ. வே. சாமிநாத ஐயர் திருவாரூர் மாவட்டத்தில் உள்ள உத்தமதானபுரத்தில் பிறந்தார்; அவரது இயற்பெயர் வேங்கடரத்தினம்.
- அவரது ஆசிரியர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம்; அவர் "சாமிநாதன்" என்ற பெயர் வைத்ததால், உத்தமதானபுரம் வேங்கடசுப்புவின் மகனார் சாமிநாதன் என்பதன் சுருக்கமாக "உ. வே. சா." என அழைக்கப்பட்டார்.

**154. விடை: C**

**விளக்கம்:**

**உவே.சா பதிப்பித்த நூல்கள்**

- நீலி இரட்டை மணிமாலை - 1874
- சீவகசிந்தாமணி - 1887
- பத்துப்பாட்டு மூலமும் உரையும் - 1889
- சிலப்பதிகாரம் - 1892
- புறநானூறு - 1894
- மணிமேகலை - 1898
- ஐங்குறுநூறு - 1903
- பதிற்றுப்பத்து - 1904
- புராணங்கள் - 1906
- பரிபாடல் - 1918
- தமிழ்விடுதூது - 1930
- பத்துப்பாட்டு மூலம் - 1931
- குறுந்தொகை - 1937

**155. விடை: B**

**156. விடை: D**

**விளக்கம்:**

- கழைக்கூத்தியின் காதல் நூலின் ஆசிரியர் பாவேந்தர் பாரதிதாசன்.
- திருக்குறளும் கடவுளும், தமிழர் சமுதாயம், விதியோ வினையோ, நிலைபெற்ற சிலை, வீராயி, கவிஞனின் காதல், மே தினமே வருக, கண்ணப்பன் கிளிகள், குருவிப்பட்டி, தமிழர் சமுதாயம், மாதவி காவியம் ஆகிய நூல்கள் தமிழ் ஒளி இயற்றியவை.

**157. விடை: D**

**விளக்கம்:**

- உபாத்தியாயர் - ஆசிரியர்
- அக்ஷராப்பியாசம் - எழுத்துப் பயிற்சி
- கீழ்வாயிலக்கம் - பின்ன எண்ணின் கீழ்த்தொகை
- மேல்வாயிலக்கம் - பின்ன எண்ணின் மேல்தொகை
- குழிமாற்று - பெருக்கல் வாய்பாடு
- சீதாள பத்திரம் - தாழை மடல்
- நவத்வீபம் - வங்காளத்தில் உள்ள ஓர் ஊர்

**158. விடை: A**

**விளக்கம்:**

- கடல் பயணத்தின் போதே தமிழ் நூல்களையும் வடமொழி நூல்களையும் பயின்றார்.
- தமிழ்ச் செய்யுட்கலம்பகம் என்ற நூலைத் தொகுத்தார்.
- போப், உயர்ந்த பண்பாட்டுக்குரிய பொறுமை, சினமின்மை, நட்பு முதலானவற்றை விளக்கும் அறுநூறு செய்யுள்களை, அறநூல்களிலிருந்து ஆய்ந்தெடுத்துத் 'தமிழ்ச் செய்யுட்கலம்பகம்' என்னும் நூலாகத் தொகுத்ததோடு, அந்தப் பாக்களுக்கு விளக்கமும் தந்துள்ளார்.

**159. விடை: A**

**விளக்கம்:**

பள்ளிக் கூடத்து அசையாம்
பற்பலத் தொட்டில் கிடத்தித்
தள்ளிச் சிறார் கூடித்
தாலாட்டி உள் இலகு
மஞ்சள் குளிப்பாட்டி
மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிக வளர்ந்தாய்!

**160. விடை: C**

**161. விடை: C**

**விளக்கம்:**

- திருக்குறள் தமிழ் மரபுரை - இரா.இளங்குமரனார்
- திருக்குறள் மரபுரை - தேவநேயப் பாவாணர்
- திருக்குறள் உரை - பாரதிதாசன்
- திருக்குறள் புது உரை - நாமக்கல் கவிஞர்

**162. விடை: C**

**163. விடை: B**

**விளக்கம்:**

பெருஞ்சித்திரனார் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ்நிலம் ஆகிய இதழ்களை நடத்தினார்.

**164. விடை: C**

**விளக்கம்:**

| விருது | வழங்கிய அமைப்பு | ஆண்டு |
|---|---|---|
| பத்ம பூஷன் விருது | மத்திய அரசு | 1977 |
| கலைமாமணி விருது | தமிழக அரசு | 1978 |

**165. விடை: A**

**விளக்கம்:**

- தமிழ், திராவிட மொழிகளான கன்னடம், தெலுங்கு, மலையாளம், துருவம் போன்ற மொழிகளுக்குத் தாய்மொழியாக உள்ளது.
- தமிழ், பிராகுயி போன்ற வடபுல மொழிகளுக்கும் தாய்மொழியாக விளங்குகிறது என்று கால்டுவெல் கூறுகிறார்.
- ஆயிரத்தெண்ணூறு மொழிகளுக்கு வேர்ச்சொற்களை வழங்கியுள்ளது தமிழ்.
- நூற்றெண்பது மொழிகளுக்கு உறவுப்பெயர்களையும் தந்துள்ளது தமிழ்.
- உலக மொழிகளுக்கெல்லாம் தாய்மொழியாகத் திகழும் தன்மையைத் தமிழ் பெற்றுள்ளது.

**166. விடை: C**

**விளக்கம்:**

திராவிட மொழிகள்

| பிரிவு | மொழிகள் |
|---|---|
| **தென்திராவிடம்** | தமிழ், மலையாளம், கன்னடம், குடகு/கொடகு, துளு, கோத்தா, தோடா, கொரகா, இருளா, படகா/படகு |
| **நடுத்திராவிடம்** | தெலுங்கு, கூவி/குவி, கூயி, கோலாமி/கொலாமி, கோண்டா, நாய்க்கி, பெங்கோ, மண்டா, பர்ஜி, கதபா, கோண்டி, கோயா |
| **வடதிராவிடம்** | குருக், மால்தோ, பிராகுய்/பிராகுயி |

**167. விடை: C**

**விளக்கம்:**

தாயகத்துக்குச் சென்ற போப், 1885 முதல் 1908ஆம் ஆண்டுவரை இருபத்து மூன்றாண்டுகளாக இங்கிலாந்துப் பல்கலைக்கழகத்தில் தமிழ், தெலுங்கு கற்பிக்கும் பேராசிரியராகப் பணிபுரிந்தார்.

**168. விடை: B**

**விளக்கம்:**

- 1901 - மதுரைத் தமிழ்ச்சங்க இதழான 'செந்தமிழில்' பரிதிமாற் கலைஞரின் 'உயர்தனிச் செம்மொழி' என்னும் கட்டுரை வெளியிடப்பட்டது.
- 1966 - உயர்தனிச் செம்மொழி என்னும் ஆங்கில நூல் தேவநேயப்பாவாணரால் எழுதி வெளியிடப்பட்டது.

**169. விடை: C**

**விளக்கம்:**

- பாரதிதாசன் விருதினைப் பெற்ற முதல் கவிஞர் சுரதா.
- பாரதிதாசன் 1954-இல் புதுச்சேரி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

**170. விடை: D**

**விளக்கம்:**

**இயற்றிய நூல்கள்**

- அறுபருவத்திருக்கூத்து
- எண்சுவை எண்பது
- கொய்யாக்கனி
- திருக்குறள் மெய்ப்பொருளுரை
- நூறாசிரியம்
- பள்ளிப்பறவைகள்
- அருளி
- வேண்டும் விடுதலை

**171. விடை: A**

**விளக்கம்:**

- நிகண்டுகளுள் ஒன்றான அகராதி நிகண்டில் இச்சொல் அடைமொழியாக அமைந்துள்ளது.
- இந்நூலே அகரமுதலிகள் தோன்றுவதற்கு ஒரு திருப்பு முனையாக அமைந்தது
- மொழிஞாயிறு பாவாணர்: "ஆதி" என்பது வடமொழிச் சொல் என்பதால், "அகரமுதலி" எனப் பெயர் மாற்றினார்.

**172. விடை: D**

**விளக்கம்:**

**மொழியின் தோற்றம்**

- மனிதர் தமக்குத் தோன்றிய கருத்துகளைப் பிறருக்கு உணர்த்த கண்டுபிடித்த கருவியே மொழி.
- ஆரம்பத்தில் மனிதர்கள் தங்கள் எண்ணங்களை வெளிப்படுத்த மெய்ப்பாடுகள், சைகைகள், ஒலிகள், ஓவியங்கள் ஆகியவற்றைப் பயன்படுத்தினர்.
- இவ்வாறு பயன்படுத்திய முறைகள் மூலம் பருப்பொருள்களை மட்டும் ஓரளவு உணர்த்த முடிந்தது.
- நுண்பொருள்களை இம்முறைகளால் தெளிவாக வெளிப்படுத்த முடியவில்லை.
- இதனால், மனிதர்கள் ஒலிகளை உருவாக்கி பயன்படுத்தத் தொடங்கினர்.
- சைகைகளுடன் இணைந்து பொருள் உணர்த்திய ஒலிகள் பயன்படுத்தப்பட்டன.
- காலப்போக்கில், ஒலிகள் தனியாகவே பொருள் உணர்த்தும் வலிமை பெற்றன.
- இவ்வாறு வளர்ந்த ஒலிகள் மொழியாக உருவெடுத்தன.

**173. விடை: A**

**விளக்கம்:**

தமிழ் இலக்கணத்தை Elementary Tamil Grammar என மூன்று பாகமாக எழுதினார்.

**174. விடை: A**

**விளக்கம்:**

முதன்முதலில் பிரான்சிஸ் எல்லிஸ் என்பார் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளை ஒப்புமைப்படுத்தி ஆய்ந்து இவை தனியொரு மொழிக்குடும்பத்தைச் சேர்ந்தவை என்ற கருத்தை முன்வைத்தார், மால்தோ, தோடா, கோண்டி முதலான மொழிகள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. ஹோக்கன் என்பார் தென்திராவிடம் தமிழ் மலையாளம் கன்னடம் சமஸ்கிருத மொழிக்குள்ளும் செல்வாக்குச் செலுத்தியுள்ளன எனவும் குறிப்பிட்டார்.

**175. விடை: D**

**விளக்கம்:**

- பாரதிதாசனின் காலம் 29.04.1891 முதல் 21.04.1964 வரை வாழ்ந்தார்.
- பாரதிதாசன் பெயரில் விருது 1978-ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது.
- பாரதிதாசன் பதினாறு வயதில் புதுவை அரசினர் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றினார்.

**176. விடை: C**

**177. விடை: D**

**விளக்கம்:**

உலகக் கப்பியங்களோடும், உலக நாடகங்களோடும் சிலப்பதிகாரத்தை ஒப்பிட்டுப்பார்த்து அதை “நாடகக் காப்பியம்” என்றும், “குடிமக்கள் காப்பியம்” என்றும் ஒரு வரியில்கூறியவர்.

**178. விடை: C**

**விளக்கம்:**

இந்திய அரசு 2006 ஆம் ஆண்டு உவே.சா. அவர்களைப் பெருமைப்படுத்த அஞ்சல்தலை வெளியிட்டது

**179. விடை: C**

**180. விடை: C**

**விளக்கம்:**

- மதுரையை அடுத்த திருநகரில் 6. 8. 1962 ஆம் நாள் தமிழ்மொழி வாழ்ந்தால் தமிழகம் வாழும் என்னும் நோக்கத்தை முன்வைத்து தமிழ்க் காப்புக் கழகத்தை சி. இலக்குவனார் தொடங்கினார்.
- இக்கழகத்திற்கு அவர் தலைவராகவும் புலவர் இரா. இளங்குமரன் பொதுச் செயலாளராகவும் அமைந்தனர்.
- இக்கழகம் தமிழில் பேசுக! தமிழில் எழுதுக! தமிழில் பெயரிடுக! தமிழில் பயில்க! என்னும் நான்கு செயல் திட்டங்களை முன்வைத்துப் பணியாற்றியது

**181. விடை: B**

**விளக்கம்:**

- திராவிட நாடு இதழின் ஆசிரியர் அண்ணா.
- தாமரை இதழின் ஆசிரியர் ப. ஜீவானந்தம்.

**182. விடை: B**

**183. விடை: B**

**விளக்கம்:**

தமிழ் → தமிழா → தமிலா → டிரமிலா → ட்ரமிலா → த்ராவிடா → திராவிடா

**184. விடை: C**

**விளக்கம்:**

- 1886ஆம் ஆண்டு திருக்குறளை The Sacred Kural என்று 1,330 குறள்களையும் முதன்முதலாக முழுமையாக ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.
- ஜி.யு.போப்பின் ஆகச்சிறந்த படைப்பாகக் கருதப்படுவது அவரது திருவாசக மொழிபெயர்ப்பு.
- தமது எண்பதாம் அகவையில், 1900ஆம் ஆண்டு திருவாசகத்தின் ஆங்கில மொழிபெயர்ப்பினை வெளியிட்டார். தம் இறுதிக்காலத்தில் புறப்பொருள் வெண்பாமாலை, புறநானூறு, திருவருட்பயன் முதலிய நூல்களையும் பதிப்பித்தார்.

**185. விடை: C**

**விளக்கம்:**

- நாலுகு - தெலுங்கு
- நாலு - கன்னடம், துளு

**186. விடை: A**

**187. விடை: D**

**விளக்கம்:**

- இளைஞர் இலக்கியம், எதிர்பாராத முத்தம், கழைக்கூத்தியின் காதல் ஆகியவை பாரதிதாசன் எழுதிய நூல்கள் ஆகும்.
- 'குழந்தை இலக்கியம்' என்ற நூலை எழுதிய கவிஞர் வாணிதாசன்

**188. விடை: A**

**விளக்கம்:**

கம்பர் தமிழின் நிலைத்தன்மையை "என்றுமுள தென்தமிழ்" என எடுத்துரைத்தார்.

**189. விடை: B**

**விளக்கம்:**

**உ. வே. சா பதிப்பித்த நூல்கள்**

- எட்டுத்தொகை - 8
- பத்துப்பாட்டு - 10
- சீவகசிந்தாமணி - 1
- சிலப்பதிகாரம் - 1
- மணிமேகலை - 1
- புராணங்கள் - 12
- உலா - 9
- கோவை - 6
- வெண்பா நூல்கள் - 13
- அந்தாதி - 3
- பரணி - 2
- மும்மணிக்கோவை - 2
- பிற பிரபந்தங்கள் - 4

**190. விடை: C**

**விளக்கம்**

- முந்திரி - 1/320
- அரைக்காணி - 1/160
- அரைக்காணி முந்திரி - 3/320
- காணி - 1/80
- கால் வீசும் - 1/64
- அரைமா - 1/40
- அரைவீசம் - 1/32

**191. விடை: B**

**விளக்கம்:**

- முத்துசாமிப் பிள்ளை வீரமாமுனிவரின் வாழ்க்கை வரலாற்றை 1822 இல் எழுதி, அந்நூலை அவரே ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 1840 இல் வெளியிட்டார்.
- தமிழில் அமைந்த காப்பியங்களிலேயே, தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத வெளிநாட்டவர் ஒருவரால் இயற்றப்பட்டது எனும் பெருமை தேம்பாவணிக்கே உண்டு.
- மேலும் வீரமாமுனிவரைப் போல, வேறெந்தக் காப்பியப் புலவரும் சிற்றிலக்கியம், அகராதி, இலக்கணம் உரைநடை எனப் பிற இலக்கிய வகைகளில் நூல்கள் படைத்தாரல்லர்.

**192. விடை: D**

SUCCESS GUARANTEED
Since 2011

**193. விடை: A**

**விளக்கம்:**

ஜி.யு.போப்பின் ஆகச்சிறந்த படைப்பாகக் கருதப்படுவது அவரது திருவாசக மொழிபெயர்ப்பு

**194. விடை: C**

**விளக்கம்:**

“ஒரு நாட்டில் பிறந்த மக்களுக்கு வேண்டப்படும் பற்றுகளுள் தலையாய பற்று மொழிப்பற்றே. மொழிப்பற்று இல்லாதாரிடத்துத் தேசப்பற்றும் இராது என்பது உறுதி. தேசம் என்பது மொழியை அடிப்படையாகக்கொண்டு இயங்குவது. ஆதலால், தமிழர்களுக்குத் தாய்மொழிப் பற்றுப் பெருகவேண்டும் என்பது எனது பிரார்த்தனை” - தந்தை பெரியார்.

**195. விடை: A**

**விளக்கம்:**

- தமிழக அரசு சென்னை மெரினா கடற்கரையில் உருவச்சிலை அமைத்து கவுரவப்படுத்தியுள்ளது.
- ஜூலியன் வில்சன் - "இருவினை கடந்த செல்வன் இசைத்த வாசகத்தை எல்லாம் வரு விளையாட்டாற் போலும் மறுமொழி யதனில் வைத்தீர்" என்றார்

**196. விடை: C**

**விளக்கம்:**

**தமிழ்மொழியின் தொன்மை**

- தமிழினம் தனக்குவமையில்லாத ஒரு தனி இனமாகும்.
- தமிழர் நாகரிகம் தன்னிகரில்லாத உயர்ந்த நாகரிகமாகும்.
- உழவையும் தொழிலையும் மதித்தவர்கள் தமிழர்.
- சான்றோனாக இருப்பதே கல்வியின் இறுதி இலக்காகக் கருதப்பட்டது.
- கொடுத்து மகிழ்ந்து இன்பம் கண்டவர்கள் தமிழர்.
- இத்தகைய உயர்ந்த நாகரிகமும் பண்பாடும் கொண்டவர்களாகத் தமிழர் வாழ்ந்தனர்.

**197. விடை: C**

**விளக்கம்:**

- "இருட்டறையில் உள்ளதடா உலகம்" என்று கூறியவர் பாரதிதாசன்.
- இது அவரது "பாண்டியன் பரிசு" என்ற நூலில் வரும் ஒரு பிரபலமான அடி.
- இந்தப் பாடலில், சாதிய அமைப்பையும், அதனுடன் தொடர்புடைய சமூகப் பாகுபாடுகளையும் அவர் சாடுகிறார்.

**198. விடை: C**

**விளக்கம்:**

இவர் இயற்றிய பிற ஆங்கில நூலகள்

- Advaita in Tamil,
- Tamil - A Bird's eye view

**199. விடை: B**

**விளக்கம்:**

அரசு ஆவணக்காப்பகம் - சென்னை

**200. விடை: A**

**விளக்கம்:**

- கல்லறையில் தம்மை அடக்கம் செய்யும் போது தான் மொழிபெயர்த்து வெளியிட்ட திருக்குறள் மற்றும் திருவாசகத்தையும் உடன் வைக்க வேண்டும் என்றும்,
- என் கல்லறையை அமைப்பதற்காகும் செலவில் ஒரு பகுதி தமிழ் மக்களின் நன்கொடையாக அமைய வேண்டும் என்று விரும்பினார்.
- தனது கல்லறையின் மீது ‘இங்கே ஒரு தமிழ் மாணவன்’ உறங்கிக் கொண்டிருக்கிறான் என்று செதுக்கப்படவேண்டும் என்றும் தன் விருப்பத்தை எழுதி வைத்தார்.
- புறநானூற்றுப் பாடல்கள் சிலவற்றை “Extracts from Purananooru and Purapporul Venbamalai” எனும் தலைப்பில் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்
- The Four Hundred Songs of War and Wisdom: An Anthology of Poems from Classical Tamil, the Purananuru என்னும் தலைப்பில் ஜார்ஜ் எல். ஹார்ட் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்

VETRII I.A.S STUDY CIRCLE
SUCCESS GUARANTEED
Since 2011